கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුවල උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE
Kanniya Road,Varothaya Nagar, Trincomalee

Our Ref:- NP /15/MA/GEN 08 Your Ref:- 16 July 2009

சுற்றறிக்கை 03/2009

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள்,

சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் / பொதுமுகாமையாளர்கள்

## 2008ம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் கூட்டுறவுத்துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகளை இத்துறையின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தல்

கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரிச்சலுகைகளும், கூட்டுறவுச் சங்கங்களினால் செலுத்தப்படவேண்டிய வரிகள் தொடர்பாகவும் உள்ள விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இதற்கமைய ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் மாதாந்தம் பெற்றுக்கொள்ளும் வரிச்சலுகைகளை மாதாந்த கணக்கறிக்கையில் கணக்கிட்டு வியாபார அபிவிருத்தி நிதி ஒதுக்கமாக கணக்கிடல் வேண்டும். இதேபோல வருடாந்தம் பெறவேண்டிய வரிச்சலுகைகள் கணக்காய்வின்போது தனியாக கணக்கிடப்பட்டு வியாபார அபிவிருத்தி நிதி ஒதுக்கமாக கணக்கிடல் வேண்டும்.

இணைக்கப்பட்டுள்ள வரிச்சலுகைகள் தொடர்பான பட்டியலில் ஒவ்வொரு வரிச்சலுகைகள் தொடர்பான பட்டியலில் ஒவ்வொரு வரிச்சலுகையும் வழங்கப்பட்ட காலத்திலிருந்து வரிகள் தொடர்பான விபரங்கள் கூட்டுறவுச் சங்கங்களால் திரட்டப்படல் வேண்டும். தனித்தனியாக ஒவ்வொரு வரி தொடர்பான விபரங்களும் ஆண்டு ரீதியாக திரட்டப்பட்டு அவற்றை ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றுவதற்காக எனது அனுமதிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

இதேபோன்று கூட்டுறவுச் சங்கங்களால் 01.04.2002ல் இருந்து வைப்புகளின் வட்டிகளுக்கு எதிரானவரி இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். இவ்வரி தொடர்பான விபரங்களும் ஆண்டு ரீதியாக திரட்டப்பட்டு எனக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் இக்கொடுப்பனவைச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

இவ்வரிக்கணக்கீடு தொடர்பாக கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வை மேற்கொள்ளும் சகல கணக்காய்வாளர்களும் கணக்காய்வின்போது இவ்வரிகள் தொடர்பான கணக்கீடு சரியாக மேற்கொள்ளப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளதா என்பதையும், வியாபார அபிவிருத்தி நிதியில் ஒதுக்கமாக கணக்கிடப்பட்டுள்ளதா என்பதும் பரிசீலனை செய்யப்படல் வேண்டும். அத்தோடு சங்கங்களின் நிலையான வைப்புகள் தொடர்பில் Automatic Renewal தன்னியக்க புதுப்பித்தல் முறையில் கணக்குகள் காணப்படுமாயின் வங்கியுடன் தொடர்பு கொண்டு வைப்பிற்கான வருடாந்த வட்டிவீதத்தை உறுதிப்படுத்தி வட்டி வீதத்திற்கேற்ப வைப்புகளுக்கான வட்டி கிடைத்துள்ளதா என்றும் இவ் வைப்புகளுக்கு பெற்ற வட்டி பிடித்து வைத்தல் வரி நீக்கி பெறப்பட்ட வட்டி என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தின் இக்கொள்கையினால் சங்கங்கள் அடைந்த அனுகூலங்கள் பற்றி துல்லியமாககாட்டக்கூடிய வகையில் கணக்குகள் அமைந்திருத்தல் வேண்டும். கணக்காய்வின்போது அறிக்கையில் இவ் வரிச்சலுகை மூலம் சங்கங்கள் அடைந்த அனுகூலங்கள் பற்றி கணக்காய்வாளர் குறிப்பிடுதல் அவசியமானதாகும்.

சகல கூட்டுறவுச்சங்கங்களும் கூட்டுறவுத்துறைக்கு அரசவரிவிலக்கினால் கிடைக்கப்பெற்றுள்ள நன்மைகளை கணிப்பீடு செய்து அதன் உச்சப்பயனை கூட்டுறவுத்துறைக்கும், அங்கத்தவர்களுக்கும், பொதுமக்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் துரித வேலைத்திட்டம் ஒன்றினை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

ஆ.சுப்பிரமணியசர்மா
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாணம்

பிரதி

1. செயலாளர், உள்ளூராட்சி, நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, கைத்தொழில், சமூகசேவைகள் அமைச்சு, வடக்கு மாகாணம்

☏-CCD & RCS – 060 2264646 Gen – 060 2264645 Fax – 026 2226951/4/6/7 – Ext - 241
E- mail :- ccdnp@mail.com